9th November 1966]

of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, that the inamdar with a view to deprive them from getting ryotwari patta is trying to evict them with the help of local police, that the order of the Tahsildar in holding the inamdar as prima facie entitled to ryotwari patta is against law and not justifiable. and that necessary enquiry be made in the matter.

(c) While the matter was under enquiry by the District Revenue Officer who granted interim stay of the orders of the Tahsildar, Tirunelveli, the inamdar had filed a writ petition in the High Court and obtained stay of all further proceedings in the matter. Hence, no further enquiry could be conducted. The writ petition has since been dismissed. As the request relates to grant of ryotwari patta, the petitioners have been informed that they may apply to the Assistant Settlement Officer, Kovilpatti who will conduct detailed enquiries.

தாம்பிரபரணி ஆறு

***560 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** *கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) தாம்பிரபரணி நதியில் மழைகாலத்தில் கடந்த **15** *ஆண்டுகள் வருடந்தோறும் வீணாகும் தண்ணீர் அளவென்ன ?*

(இ) வீணாகும் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா?

(உ) திட்ட விவரமென்ன ?

THE HON. SRI V. RAMAIAH : A statement [a] is placed on on the Table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : *கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் இருந்து ராம நதி திட்டத்திற்கு தொழில் நுட்ப அனுமதி கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது. இந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலேயே எடுத்து ஆரம்பித்து வைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

கனம் திரு. வெ. ராமையா : *அந்த முயற்சி எடுத்துக்கொள்ளப் படும் என்று நினைக்கிறேன்.*

திரு. எம். எஸ். செல்வராஜன் : *உத்தேச ராமநதித் திட்டம் இப்போதுள்ள அளவைவிட இன்னும் பரந்த விரிவான முறையில் வகுக்கப்பட்டு, அதிகப் பயன் தரத்தக்க வகையில் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அது பரிசீலிக்கப்பட்டதா ? அதன்மீது எடுக்கப்பட்ட முடிவு, விளைவு என்ன ?*

கனம் திரு. வெ. ராமையா : *அது பெரிய திட்டமாக அமைக்கப் படவேண்டுமென்ற கோரிக்கை அந்த வட்டாரத்தில் இருந்து ஆலோசனைக்கு வந்து பரிசீலிக்கப்பட்டது. அதை எடுத்துக் கொண்டால் நீண்டகாலம் ஆகிவிடும், ஆகவே, உடனடியாக*

a Printed as Appendix VII on pages 904–906.

[9th November 1966

இப்போதுள்ள முறையில் ஆரம்பித்துவிட்டால் போகப்போக விரிவுபடுத்திக்கொள்ளலாம் என்பதாகக் கருதப்பட்டது. அரசாங்கத்தின் முடிவு வறண்டு போய் இருக்கிற நிலங்களுக்கு அதிகமாகத் தண்ணீர் கொடுக்கக் கூடிய முறையில் இந்தத் திட்டம் அமைக்கப்படவேண்டும் என்பதாகும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் கொடுத்திருக்கக் கூடிய தகவல்களில் இருந்தே எத்தனையோ கோடி க்யூசெக்ஸ் தண்ணீர் வீணாகக் கடலில் போய்க் கலக்கின்ற நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். திருச்செந்தூர் தாலுக்கா வறண்ட பகுதி, சடையனேரி, நொச்சிக் குளம் போன்ற இடங்களுக்குத் தண்ணீர் கொடுக்க இந்தத் திட்டத்தின் கீழ் வகை இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த மாதிரி பரிசீலனை செய்ததாக ஞாபகம் எனக்கில்லை.

தண்ணீர்த் தீர்வை

* 561 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கார்காலத்திலும், அட்வான்ஸ் கார்காலத்திலும் நஞ்சைப் பயிர் செய்யப்படும் புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்படும் தண்ணீர் தீர்வையின் 'ரேட்' என்ன ?

(இ) பிசானகாலத்தில் நஞ்சைப் பயிர் செய்யப்படும் புஞ்சை நிலங்களுக்கு விதிக்கப்படும் தண்ணீர் தீர்வையின் 'ரேட்' என்ன.

(உ) இவைகளுக்குள் வித்தியாசமிருப்பின், அதற்கான காரணமென்ன ?

(எ) இதனைப் போக்கவேண்டுமென்று கோரி திருச்செந்தூர் தொகுதி சட்டசபை உறுப்பினரிடமிருந்து 1963, 1964, 1965 வருடங்களில் முறையீடுகள் வந்துள்ளனவா ?

(ஐ) ஆம் எனில், அவைகளின்மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது?

THE HON. SRI V. RAMIAH : (a) to (c) A statement [a] is placed on the Table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் கொடுத்திருக்கக் கூடிய தகவல்களில் இருந்து மழை காலத்தில் புஞ்சையை நஞ்சையாகச் சாகுபடி செய்தாலும், ஒரு போகத்தை இரண்டு போகமாகச் சாகுபடி செய்தாலும் சாதாரணத் தண்ணீர்த் தீர்வையைவிட இரண்டு பங்கு, மூன்று பங்கு தீர்வை விதிக்கப்படுகிறது. முன்பு கேட்கப்பட்ட கேள்விக்கு எத்தனையோ கோடி க்யூசெக்ஸ் தண்ணீர் இன்றையதினம் வீணாகக் கடலில் போய்க் கலக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே தண்ணீரை உபயோகப்படுத்திக் கொள்ளாமல் இருக்க வழியில்லை என்கிற

---

[a] Printed as Appendix VIII on pages 906–908.